DEPOSITION OF WITNESS
In the court of District Munsif Cum Judicial Magistrate Court, Uthukottai,
CC . No. 154 of 2016
Prosecution witness: LW -2 / PW - 2

| | |
|---|---|
| Name | இராஜேந்திரபிரசாத் |
| Fathers / Husband name | தாமேதிரன் |
| Village | சென்னை |
| Age | 66 |

Accused called present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.02.2026.

முதன்மை விசாரனை நேரம்- மதியம் 04.10

1. United India insurance company வேலை செய்து தற்போது ஓய்வு பெற்று விட்டேன். சென்னை கொருக்குபேட்டையில் வசித்து வருகின்றேன்.

2. 09.02.2016ம் தேதி எங்கள் ஊரில் இருந்து 24 நபர்கள் பாதயாத்திரை சென்றபோது, மஞ்சாங்கரணை அருகில் TN CC 4119 மாருதி வாகனம், என்னுடன் பாதயாத்திரை வந்த ஜானர்தனன் என்பவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது.

3. அவரை உடனே தச்சூர்கூட் ரோட்டில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தோம். மருத்துவர்கள் அவர்களை பரிசோதனை செய்துவிட்டு அவர் இறந்துவிட்டதாக கூறினார்கள். அவரை திருவள்ளுர் அரசு மருத்துவனைக்கு கொண்டு செல்லுமாறு கூறினார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக புகார் கொடுக்க நான் காவல் நிலையம் சென்றேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

4. விபத்து நடந்த அன்றே போலீசார் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். அதன் பின்பு விசாரணை செய்யவில்லை. இன்று தான் நீதிமன்றத்திற்கு வருகின்றேன்.

5. இறந்துபோன ஜனார்த்தனன் அவருக்கும் எங்களுக்கும் சுமார் 20 அடி இருக்கும்.மேற்படி வாகனத்தை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். நாங்கள் பாதயாத்திரை வரும்போது மேற்படி சாலையில் எந்த வாகனமும் வரவில்லை.

6. மருத்துவமனைக்கு இறந்துபோன நபரை அழைத்து சென்ற விவரம் எதுவும் போலீசர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

7. விபத்து சம்பந்தமாக நான் கைப்பட நான் எந்த புகாரும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான்.துணை கண்காணிப்பாளர் அவர்கள் எழுதிக்கொடுத்தார் நாங்கள் கையொழுத்து போட்டோம்.

8. விபத்து காப்பீடு பெறவேண்டும் என்பதற்காக மேற்படி வாகனத்தின் மீது பொய்யான புகார் கொடுக்கப்பட்டு அதற்கு அனுசரனையாக சாட்சியம் அளிக்கின்றீர்கள் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

சாட்சியம் முடிவுற்ற நேரம் 4.20